©
GOVERNMENT OF TAMIL NADU
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 11. 20 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 303A] சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 31, 2012
ஐப்பசி 15, திருவள்ளுவர் ஆண்டு - 2043

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

*பக்கங்கள்*

**சட்ட முன் வடிவுகள்:**

எண் 34/2012– தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. .. .. .. .. 2-4

எண் 35/2012– தமிழ்நாடு நகராட்சியக் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டம் .. .. .. .. .. 5-10

எண் 36/2012– சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுல் (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. .. .. .. .. 11-12

எண் 37/2012– தமிழ்நாடு பல்கலைக் கழகச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் .. .. .. .. .. 13-15

எண் 38/2012– தமிழ்நாடு கூட்டுறவுக் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டம் .. .. .. .. 17-18

எண் 39/2012– தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டம் .. .. .. .. .. 19-20

எண் 40/2012– தமிழ்நாடு தேசியச் சட்டப்பள்ளி (திருத்தச்) சட்டம் .. .. 21-22

எண் 41/2012– தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. .. .. .. .. 23-26

**2012—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்ந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 34/2012.**

**1998—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ள சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்

**1. (1)** இந்தச் சட்டம், (2012—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 43/1998.

2—ஆம் பிரிவுக்கான திருத்தம்.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான 1998—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் 2—ஆம் பிரிவில்,——

(i) (C) எனும் கூறுகளுக்குப் பின்பு, பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும்; அதாவது:—

"(CC) ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பிடும்போது, பொருளாதார ரீதியாக அளவிடத்தக்க வரையறைகளின் அடிப்படையில் கொள்முதல் செய்கிற அமைப்புக்கு மிகுந்த ஆதாயமானதாக உள்ள ஒப்பந்தப்புள்ளியே **"மிகக் குறைந்த விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி"** எனப் பொருள்படும்"

(ii) (i) ஆம் கூறுக்கு உள்ள வரம்புரை நீக்கப்படுதல் வேண்டும்.

10—ஆம் பிரிவுக்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 10—ஆம் பிரிவில்,——

(i) "அவர்" எனும் சொல் வருகின்ற நான்கு இடங்களிலும் அதற்குப் பதிலாக, மேற்குறிப்பிடப்பட்ட அதிகாரி" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) **(6)** எனும் உட்பிரிவுக்கு, பின்வரும் வரம்புரை சேர்க்கப்படதல் வேண்டும்; அதாவது:—

***"வரம்புரை:*** ஆனால், கோரப்படும் அளவு முழுவதையும் வழங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளியாளர் இயலாதிருப்பாராயின், வகுத்துரைக்கப்படக்கூடிய நிர்ணயிக்கப்பட்ட வீதத்திலான ஒப்பந்தப்புள்ளி நடைமுறையை ஒப்பந்தப்புள்ளி ஏற்பு அதிகாரி பின்பற்றலாம்."

12—ஆம் பிரிவுக்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 12—ஆம் பிரிவில், — **(1)**—ஆம் உட்பிரிவில், "அவர்" எனும் சொல்லுக்குப் பதிலாக, "மேற்குறிப்பிடப்பட்ட அதிகாரி" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

16—ஆம் பிரிவுக்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 16—ஆம் பிரிவில்,—

(i) (c) எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது.—,

"(c) அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், சட்டப்படியாந வாரியங்கள், அரசால் அறிவிக்கை செய்யப்படக் கூடியவாறான அத்தகைய பிற நிறுவனங்கள் ஆகியவற்றால், உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் அல்லது வழங்கப்பெறும் பணிச் சேவைகளைப் பொறுத்தவரை மட்டும்;

***"வரம்புரை:*** ஆனால் அத்தகைய கொள்முதலானது, அந்த கொள்முதலுக்குத் தேவைப்படும் மொத்த அளவின் நாற்பது விழுக்காட்டிற்கு மேற்படுதல் கூடாது; மீதமுள்ள

அறுமது விழுக்காட்டினைப் பொறுத்த அளவில் மிகக் குறைந்த விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப் புள்ளியின் விலைக்கு மேற்படாத விலையில் இருத்தல் வேண்டும்.''

(ii) (dd) எனும் கூறுக்கும் அதன்கீழ் உள்ள வரம்பரைக்கும் பதிலாக, பின்வரும் கூறும் வரம்புரைகளும் அமைக்கப்படுதல் வேண்டும்; அதாவது.—

"(dd) சிறிய அளவிலான உள்நாட்டு சிறு தொழில் நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைப் பொறுத்தவரை மட்டும்:

***"முதலாம் வரம்புரை:*** ஆனால், அத்தகைய கொள்முதலானது, அந்த கொள்முதலுக்குத் தேவைப்படும் மொத்த அளவின் இருபத்தைந்து விழுக்காட்டிற்கு மேற்படுதல் கூடாது; மற்றும் மீதமுள்ல எழுபத்தைந்து விழுக்காட்டினைப் பொறுத்த அளவில் மிகக் குறைந்த விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப் புள்ளியின் விலைக்கு மேற்படாத விலையில் இருத்தல் வேண்டும்.'

***"இரண்டாம் வரம்புரை:*** மேலும், (c) மற்றும் (dd) ஆகிய கூறுகளின்படி மேற்கொள்ளப்படும் தனியொரு கொள்முதலில், அத்தகைய கொள்முதலானது, அந்த கொள்முதலுக்குத் தேவைப்படும் மொத்த அளவின் நாற்பது விழுக்காட்டிற்கு மேற்படுதல் கூடாது;,''

(iii) (f) எனும் கூறுகளுக்கப் பதிலாக, பின்வரும் கூறாநது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(f) தொடக்க நிலை உற்பத்தியாளர்களிடமிருந்து வேளாண் பொருள்கள், வேளாண் விளைபொருள்கள், கால்நடைகள் ஆகியவற்றையும்; நூற்பாலைகள் பருத்தியையும்; அரசு நிகழ்ச்சிகளுக்காக அல்லது திட்டங்களுக்காக அல்லது அரசுத் துறைகளுக்காக சந்தைகளிலிருந்து விலங்களையும்; அரசு பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் ஆகியவற்றால் விவசாயகளிடமிருந்து கரும்பையும்; தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடிகொள்முதல் மையங்கள் மூலம் நெல்லையும், அரசுத்துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றால், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து துணிப் பொருள்களையும் மற்றும் அரசினால் அறிவிக்கை செய்யப்படக்கூடிய இவை போன்ற பொருள்கள் மற்றும் பணிச் சேவைகளையும் வாங்குவதற்காகச் செய்யப்பட்ட கொள்மதல்கள்,''

(iv) (g) எனும் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும்; அதாவது:—

"(h) இணைய அலகுகள், தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்கள், ஆகியவற்றால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் அல்லது வழங்கப்பெறும் பணிச் சேவைகளை கூட்டுறவு இணையங்கள் கொள்முதல் செய்தல்:'.

**ஓ. பன்னீர்செல்வம்,**
*நிதி அமைச்சர்.*

**நோக்க—காரண விளக்கவுரை**

1998—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவுற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 43/1998), அரசு கொள்முதலில் ஒளிவு மறைவின்றி செயல்படுவதற்கும் ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்று ஏற்றுகொள்ளும் நடைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கும் வகை செய்கிறது, மேற்சொன்ன சட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயல்பாட்டில் கடந்த ஆண்டுகளின்போது ஒருசில நடைமுறைச் சிக்கல்கள் எதிர்கொள்ளப்பட்டன மற்றும் அதோடுகூட ஒரு சில மேம்பாடுகளைச் செய்யவேண்டிய தேவைகளும் உணரப்பட்டன. மேலும், தனியார் துறைப் பங்கெடுப்பின் மூலமும் கட்டுமானச் செயற்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கும், அவற்றை வடிவமைப்பதற்கும், அவற்றின் கட்டுமானத்திற்கும், அவற்றைப் பேணிவருவதற்கும் இயல்விப்பதற்கு ஏற்றதொரு மற்றம் வசதி வாய்ப்பானதொரு சூழலுக்கு வகை செய்வதற்காக, 2012—ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 22/2012) அண்மையில் இயற்றப்பட்டது. சிக்கல்களை எதிர்கொண்டு அவற்றைத் தீர்வு செய்து மீண்டுவரும்பொருட்டும் மேற்சொன்ன 22/2012 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தைத் கருத்திற்கொண்டு 1998—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 43/1998) திறம்பட நடைமுறைப்படுத்தும் பொருட்டு அரசானது, மேற்சொன்ன 43/1998 எனம் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**ஓ. பன்னீர்செல்வம்,**
*நிதி அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

**2012–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2012.**

**தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

**பகுதி–I.**

**முன்னுரை.**

**1.** (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பகுதி–II.**

**1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் IV/1919. **2.** 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 255–A எனும் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- 255-AA எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**''255–AA. நீச்சல் குளத்தைக் கட்டுவதற்கான அனுமதி.–**

(1) குறிக்கப்பட்ட நாளுக்குப் பின்னர் ஆணையரிடமிருந்து அனுமதியொன்றைப் பெறாமல், நீச்சல் குளம் எதுவும் எந்த இடத்திலும் கட்டப்படுதல் கூடாது.

(2) நீச்சல் குளம் ஒன்றைக் கட்டுவதற்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஆணையரிடம் செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் அது வகுத்துரைக்கப்படக்கூடியவாறான ஐந்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாத அத்தகைய கட்டணத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்; மற்றும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விவரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஆணையரானவர், (2)–ஆம் உட்பிரிவின்படியான விண்ணப்பம் ஒன்று வரப்பெற்றதன் பேரில், தான் தேவையெனக் கருதுகிறவாறான அத்தகைய விசாரணையைச் செய்த பின்னர், அதற்கு அனுமதியை வழங்கலாம் அல்லது வழங்க மறுக்கலாம். வழங்கப்படும் அனுமதி ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டும் இருத்தல் வேண்டும்.

(4) ஆணையரானவர், (3)–ஆம் உட்பிரிவின்படி அனுமதியை வழங்குவதற்கு மறுக்குமிடத்து, அத்தகைய மறுப்பிற்கானக் காரணங்களை அவர் எழுத்துருவில் அளித்தல் வேண்டும்.

(5) குறிக்கப்பட்ட நாளுக்கு உடனடி முன்னதாகவே நீச்சல் குளம் ஒன்று அமைந்துள்ள கட்டிடம் அல்லது நிலம் ஒன்றின் உரிமையாளர் அல்லது கையுடைமையாளர் எவரும், அத்தகைய நீச்சல் குளத்தைப் பொறுத்த அளவில், குறிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்கள் கொண்டதொரு கால அளவிற்குள், இந்தப் பிரிவின்படி அனுமதி ஒன்றைப் பெற்றாலன்றி, அவர் அத்தகைய நீச்சல் குளத்தைப் பயன்படுத்துவதைத் தொடருதல் கூடாது.

(6) நீச்சல் குளம் ஒன்று அமைந்துள்ள கட்டிடம் அல்லது நிலம் ஒன்றின் உரிமையாளர் அல்லது கையுடைமையாளர் ஒவ்வொருவரும், வகுத்துரைக்கப்படக்

கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பாதுகாப்பிற்கான வழிகாட்டு நெறி முறைகளைப் பின்பற்றியும் அந்த நீச்சல் குளத்தைப் பேணிவருதல் வேண்டும்.

(7) ஆணையர் அல்லது அவரால் இதன் பொருட்டு அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் எவரும், **378**–ஆம் பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு விசாரணை அல்லது ஆய்வு எதனையும் செய்வதன்பொருட்டு நீச்சல் குளமொன்று அமைந்துள்ள கட்டிடம் அல்லது நிலம் எதிலும் நுழையலாம்; மேலும் அவர் நீச்சல் குளத்தைப் பேணி வரும் நோக்கத்திற்காக அல்லது நீச்சல் குளத்தைப் பயன்படுத்தும் நபர்களின் பாதுகாப்பிற்காகவென அவர்தம் கருத்தில் தேவையெனக் கருதப்படும் நடவடிக்கைகள் எவற்றையும் எடுக்கலாம் அல்லது செயல் எதனையும் செய்யலாம்.

***வரம்புரை:*** ஆனால், இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக ஆணையரானவர்,–

(*i*) பள்ளிக்கூடங்களின் வளாகங்களுக்குள் அமைந்துள்ள நீச்சல் குளங்களைப் பொறுத்த அளவில், பள்ளிக்கல்வி இயக்குநரின் அலுவலகத்தில் இணை இயக்குநர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவருக்கும்;

(*ii*) கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் வளாகங்களுக்குள் அமைந்துள்ள நீச்சல் குளங்களைப் பொறுத்த அளவில், கல்லூரிக் கல்வி இயக்குநரின் அலுவலகத்தில் இணை இயக்குநர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவருக்கும் அதிகாரம் அளித்தல் வேண்டும்.

(8). (7)–ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக ஆணையரானவர், நீச்சல் குளங்கள் அமைந்துள்ள பல்வேறு வகையான கட்டிடங்கள் அல்லது நிலங்களுக்கு வெவ்வேறு நபர்களுக்கு அதிகாரம் அளிக்கலாம்.

**விளக்கம்**.– இந்தப்பிரிவின் நோக்கத்திற்காக, ''குறிக்கப்பட்ட நாள்'' என்றால் 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டத்தின் 1–ஆம் பிரிவின், (2)–ஆம் உட்பிரிவின்படி அரசானது அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதி எனப்பொருள்படும்.''.

**பகுதி – III.**

**1920 – ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் V/1920.

215–AA எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**3.** 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 215–A எனும் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

**''215–AA. நீச்சல் குளத்தைக் கட்டுவதற்கான அனுமதி.–**

(1) குறிக்கப்பட்ட நாளுக்குப் பின்னர் செயலாட்சி அதிகாரியிடமிருந்து அனுமதியொன்றைப் பெறாமல், நீச்சல் குளம் எதுவும் எந்த இடத்திலும் கட்டப்படுதல் கூடாது.

(2) நீச்சல் குளம் ஒன்றைக் கட்டுவதற்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் செயலாட்சி அதிகாரியிடம் செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் அது வகுத்துரைக்கப்படக்கூடியவாறான ஐந்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாத அத்தகைய கட்டணத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்; மற்றும் வகுத்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய விவரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) செயலாட்சி அதிகாரியானவர், (2)–ஆம் உட்பிரிவின்படியான விண்ணப்பம் ஒன்று வரப்பெற்றதன் பேரில், தான் தேவையெனக் கருதுகிறவாறான அத்தகைய விசாரணையைச் செய்த பின்னர், அதற்கு அனுமதியை வழங்கலாம் அல்லது வழங்க மறுக்கலாம். வழங்கப்படும் அனுமதி ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டும் இருத்தல் வேண்டும்.

(4) செயலாட்சி அதிகாரியானவர், (3)–ஆம் உட்பிரிவின்படி அனுமதியை வழங்குவதற்கு மறுக்குமிடத்து, அத்தகைய மறுப்பிற்கானக் காரணங்களை அவர் எழுத்துருவில் அளித்தல் வேண்டும்.

(5) குறிக்கப்பட்ட நாளுக்கு உடனடி முன்னதாகவே நீச்சல் குளம் ஒன்று அமைந்துள்ள கட்டிடம் அல்லது நிலம் ஒன்றின் உரிமையாளர் அல்லது கையுடைமையாளர் எவரும், அத்தகைய நீச்சல் குளத்தைப் பொறுத்த அளவில், குறிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்கள் கொண்டதொரு கால அளவிற்குள், இந்தப் பிரிவின்படி அனுமதி ஒன்றைப் பெற்றாலன்றி, அவர் அத்தகைய நீச்சல் குளத்தைப் பயன்படுத்துவதைத் தொடருதல் கூடாது.

(6) நீச்சல் குளம் ஒன்று அமைந்துள்ள கட்டிடம் அல்லது நிலம் ஒன்றின் உரிமையாளர் அல்லது கையுடைமையாளர் ஒவ்வொருவரும், வகுத்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பாதுகாப்பிற்கான வழிகாட்டு நெறி முறைகளைப் பின்பற்றியும் அந்த நீச்சல் குளத்தைப் பேணிவருதல் வேண்டும்.

(7) மாநில அரசால் இதன் பொருட்டு அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் எவரும், 335–ஆம் பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு விசாரணை அல்லது ஆய்வு எதனையும் செய்வதன்பொருட்டு நீச்சல் குளமொன்று அமைந்துள்ள கட்டிடம் அல்லது நிலம் எதிலும் நுழையலாம்; மேலும் அவர் நீச்சல் குளத்தைப் பேணி வரும் நோக்கத்திற்காக அல்லது நீச்சல் குளத்தைப் பயன்படுத்தும் நபர்களின் பாதுகாப்பிற்காகவென அவர்தம் கருத்தில் தேவையெனக் கருதப்படும் நடவடிக்கைகள் எவற்றையும் எடுக்கலாம் அல்லது செயல் எதனையும் செய்யலாம்.

<u>**வரம்புரை**</u>: ஆனால், இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக மாநில அரசானது,–

(*i*) பள்ளிக்கூடங்களின் வளாகங்களுக்குள் அமைந்துள்ள நீச்சல் குளங்களைப் பொறுத்த அளவில், பள்ளிக்கல்வி இயக்குநரின் அலுவலகத்தில் இணை இயக்குநர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவருக்கும்;

(*ii*) கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் வளாகங்களுக்குள் அமைந்துள்ள நீச்சல் குளங்களைப் பொறுத்த அளவில், கல்லூரிக் கல்வி இயக்குநரின் அலுவலகத்தில் இணை இயக்குநர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவருக்கும் அதிகாரம் அளித்தல் வேண்டும்.

(8). (7) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக அரசானது, நீச்சல் குளங்கள் அமைந்துள்ள பல்வேறு வகையான கட்டிடங்கள் அல்லது நிலங்களுக்கு வெவ்வேறு நபர்களுக்கு அதிகாரம் அளிக்கலாம்.

<u>**விளக்கம்**</u>.– இந்தப்பிரிவின் நோக்கத்திற்காக, ''குறிக்கப்பட்ட நாள்'' என்றால் 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டத்தின் 1ஆம் பிரிவின், (2)–ஆம் உட்பிரிவின்படி அரசானது அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதி எனப்பொருள்படும்.''.

தமிழ்நாடு சட்டம் 15/1971.

## பகுதி – IV.

### 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

**4.** 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 295–A எனும் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- 295–AA எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

<u>**''295–AA. நீச்சல் குளத்தைக் கட்டுவதற்கான அனுமதி**</u>.–

(1) குறிக்கப்பட்ட நாளுக்குப் பின்னர் ஆணையரிடமிருந்து அனுமதியொன்றைப் பெறாமல், நீச்சல் குளம் எதுவும் எந்த இடத்திலும் கட்டப்படுதல் கூடாது.

(2) நீச்சல் குளம் ஒன்றைக் கட்டுவதற்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஆணையரிடம் செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் அது வகுத்துரைக்கப்படக்கூடியவாறான ஐந்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாத அத்தகைய கட்டணத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்; மற்றும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விவரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஆணையரானவர், (2)–ஆம் உட்பிரிவின்படியான விண்ணப்பம் ஒன்று வரப்பெற்றதன் பேரில், தான் தேவையெனக் கருதுகிறவாறான அத்தகைய விசாரணையைச் செய்த பின்னர், அதற்கு அனுமதியை வழங்கலாம் அல்லது வழங்க மறுக்கலாம்.

வழங்கப்படும் அனுமதி ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டும் இருத்தல் வேண்டும்.

(4) ஆணையரானவர், (3) ஆம் உட்பிரிவின்படி அனுமதியை வழங்குவதற்கு மறுக்குமிடத்து, அத்தகைய மறுப்பிற்கானக் காரணங்களை அவர் எழுத்துருவில் அளித்தல் வேண்டும்.

(5) குறிக்கப்பட்ட நாளுக்கு உடனடி முன்னதாகவே நீச்சல் குளம் ஒன்று அமைந்துள்ள கட்டிடம் அல்லது நிலம் ஒன்றின் உரிமையாளர் அல்லது கையுடைமையாளர் எவரும், அத்தகைய நீச்சல் குளத்தைப் பொறுத்த அளவில், குறிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்கள் கொண்டதொரு கால அளவிற்குள், இந்தப் பிரிவின்படி அனுமதி ஒன்றைப் பெற்றாலன்றி, அவர் அத்தகைய நீச்சல் குளத்தைப் பயன்படுத்துவதைத் தொடருதல் கூடாது.

(6) நீச்சல் குளம் ஒன்று அமைந்துள்ள கட்டிடம் அல்லது நிலம் ஒன்றின் உரிமையாளர் அல்லது கையுடைமையாளர் ஒவ்வொருவரும், வகுத்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பாதுகாப்பிற்கான வழிகாட்டு நெறி முறைகளைப் பின்பற்றியும் அந்த நீச்சல் குளத்தைப் பேணிவருதல் வேண்டும்.

(7) ஆணையர் அல்லது அவரால் இதன் பொருட்டு அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் எவரும், 468–ஆம் பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு விசாரணை அல்லது ஆய்வு எதனையும் செய்வதன்பொருட்டு நீச்சல் குளமொன்று அமைந்துள்ள கட்டிடம் அல்லது நிலம் எதிலும் நுழையலாம்; மேலும் அவர் நீச்சல் குளத்தைப் பேணி வரும் நோக்கத்திற்காக அல்லது நீச்சல் குளத்தைப் பயன்படுத்தும் நபர்களின் பாதுகாப்பிற்காகவென அவர்தம் கருத்தில் தேவையெனக் கருதப்படும் நடவடிக்கைகள் எவற்றையும் எடுக்கலாம் அல்லது செயல் எதனையும் செய்யலாம்.

**வரம்புரை**: ஆனால், இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக ஆணையரானவர்,–

(*i*) பள்ளிக்கூடங்களின் வளாகங்களுக்குள் அமைந்துள்ள நீச்சல் குளங்களைப் பொறுத்த அளவில், பள்ளிக்கல்வி இயக்குநரின் அலுவலகத்தில் இணை இயக்குநர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவருக்கும்;

(*ii*) கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் வளாகங்களுக்குள் அமைந்துள்ள நீச்சல் குளங்களைப் பொறுத்த அளவில், கல்லூரிக் கல்வி இயக்குநரின் அலுவலகத்தில் இணை இயக்குநர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவருக்கும் அதிகாரம் அளித்தல் வேண்டும்.

(8). (7) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக ஆணையரானவர், நீச்சல் குளங்கள் அமைந்துள்ள பல்வேறு வகையான கட்டிடங்கள் அல்லது நிலங்களுக்கு வெவ்வேறு நபர்களுக்கு அதிகாரம் அளிக்கலாம்.

**விளக்கம்**.–இந்தப்பிரிவின் நோக்கத்திற்காக, ''குறிக்கப்பட்ட நாள்'' என்றால் 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டத்தின் 1–ஆம் பிரிவின், (2)–ஆம் உட்பிரிவின்படி அரசானது அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதி எனப்பொருள்படும்.''.

தமிழ்நாடு சட்டம் 25/1981.

**பகுதி – V.**

**1981 – ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

295–AA எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**5.** 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 295–A எனும் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

**''295–AA. நீச்சல் குளத்தைக் கட்டுவதற்கான அனுமதி.–**

(1) குறிக்கப்பட்ட நாளுக்குப் பின்னர் ஆணையரிடமிருந்து அனுமதியொன்றைப் பெறாமல், நீச்சல் குளம் எதுவும் எந்த இடத்திலும் கட்டப்படுதல் கூடாது.

(2) நீச்சல் குளம் ஒன்றைக் கட்டுவதற்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஆணையரிடம் செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் அது வகுத்துரைக்கப்படக்கூடியவாறான ஐந்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாத அத்தகைய கட்டணத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்; மற்றும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விவரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஆணையரானவர், (2) ஆம் உட்பிரிவின்படியான விண்ணப்பம் ஒன்று வரப்பெற்றதன் பேரில், தான் தேவையெனக் கருதுகிறவாறான அத்தகைய விசாரணையைச் செய்த பின்னர், அதற்கு அனுமதியை வழங்கலாம் அல்லது வழங்க மறுக்கலாம். வழங்கப்படும் அனுமதி ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டும் இருத்தல் வேண்டும்.

(4) ஆணையரானவர், (3)–ஆம் உட்பிரிவின்படி அனுமதியை வழங்குவதற்கு மறுக்குமிடத்து, அத்தகைய மறுப்பிற்கானக் காரணங்களை அவர் எழுத்துருவில் அளித்தல் வேண்டும்.

(5) குறிக்கப்பட்ட நாளுக்கு உடனடி முன்னதாகவே நீச்சல் குளம் ஒன்று அமைந்துள்ள கட்டிடம் அல்லது நிலம் ஒன்றின் உரிமையாளர் அல்லது கையுடைமையாளர் எவரும், அத்தகைய நீச்சல் குளத்தைப் பொறுத்த அளவில், குறிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்கள் கொண்டதொரு கால அளவிற்குள், இந்தப் பிரிவின்படி அனுமதி ஒன்றைப் பெற்றாலன்றி, அவர் அத்தகைய நீச்சல் குளத்தைப் பயன்படுத்துவதைத் தொடருதல் கூடாது.

(6) நீச்சல் குளம் ஒன்று அமைந்துள்ள கட்டிடம் அல்லது நிலம் ஒன்றின் உரிமையாளர் அல்லது கையுடைமையாளர் ஒவ்வொருவரும், வகுத்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பாதுகாப்பிற்கான வழிகாட்டு நெறி முறைகளைப் பின்பற்றியும் அந்த நீச்சல் குளத்தைப் பேணிவருதல் வேண்டும்.

(7) ஆணையர் அல்லது அவரால் இதன் பொருட்டு அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் எவரும், 467–ஆம் பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு விசாரணை அல்லது ஆய்வு எதனையும் செய்வதன்பொருட்டு நீச்சல் குளமொன்று அமைந்துள்ள கட்டிடம் அல்லது நிலம் எதிலும் நுழையலாம்; மேலும் அவர் நீச்சல் குளத்தைப் பேணி வரும் நோக்கத்திற்காக அல்லது நீச்சல் குளத்தைப் பயன்படுத்தும் நபர்களின் பாதுகாப்பிற்காகவென அவர்தம் கருத்தில் தேவையெனக் கருதப்படும் நடவடிக்கைகள் எவற்றையும் எடுக்கலாம் அல்லது செயல் எதனையும் செய்யலாம்.

**வரம்புரை**: ஆனால், இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக ஆணையரானவர்,–

(*i*) பள்ளிக்கூடங்களின் வளாகங்களுக்குள் அமைந்துள்ள நீச்சல் குளங்களைப் பொறுத்த அளவில், பள்ளிக்கல்வி இயக்குநரின் அலுவலகத்தில் இணை இயக்குநர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவருக்கும்;

(*ii*) கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் வளாகங்களுக்குள் அமைந்துள்ள நீச்சல் குளங்களைப் பொறுத்த அளவில், கல்லூரிக் கல்வி இயக்குநரின் அலுவலகத்தில் இணை இயக்குநர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவருக்கும் அதிகாரம் அளித்தல் வேண்டும்.

(8). (7)–ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக ஆணையரானவர், நீச்சல் குளங்கள் அமைந்துள்ள பல்வேறு வகையான கட்டிடங்கள் அல்லது நிலங்களுக்கு வெவ்வேறு நபர்களுக்கு அதிகாரம் அளிக்கலாம்.

**விளக்கம்.–** இந்தப்பிரிவின் நோக்கத்திற்காக, ''குறிக்கப்பட்ட நாள்'' என்றால் 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டத்தின் 1ஆம் பிரிவின், (2)–ஆம் உட்பிரிவின்படி அரசானது அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதி எனப்பொருள்படும்.''.

**நோக்க–காரண விளக்கவுரை.**

நீச்சல் குளத்தைக் கட்டுவதிலும் அதனைப் பேணிவருவதிலும் பாதுகாப்பு வழி முறைகள் இல்லாததன் காரணமாக பள்ளி மாணவன் ஒருவனுக்கு துர்மரணம் ஏற்பட்டுள்ளது என்பது அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே அரசானது, நீச்சல் குளங்களைப் பயன்படுத்துபவர்களின் பாதுகாப்பையும் காப்புறுதித் தன்மையையும் உறுதி செய்வதற்கான முக்கியத்துவம் மிக்க மற்றும் பரந்த வழி முறைகளை குறிப்பாகக் கல்வி நிறுவனங்களில் ஏற்படுத்தவேண்டியது கட்டாயத் தேவையானதெனக் கருதுகிறது. அதற்கிணங்கிய வகையில், நீச்சல் குளங்களைக் கட்டுவதையும் அவற்றைப் பேணிவருவதையும் அவற்றை மேற்பார்வை செய்வதையும் திறம்பட ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக, அரசானது 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் IV/1919), 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1971), 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1981), 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) ஆகியவற்றைத் தக்கவாறு திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.பி. முனுசாமி,**
*நகராட்சி நிர்வாகம் மற்றும்*
*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இச்சட்ட முன்வடிவின் 2–ஆம் கூறினால் 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் IV /1919) புகுத்தக் கருதப்படும் 255-AA எனும் புதிய பிரிவும், இச்சட்ட முன்வடிவின் 3–ஆம் கூறினால் 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் V/1920) புகுத்தக் கருதப்படும் 215–AA எனும் புதிய பிரிவும், இச்சட்ட முன்வடிவின் 4–ஆம் கூறினால் 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 15/1971) புகுத்தக் கருதப்படும் 295–AA எனும் புதிய பிரிவும், இச்சட்ட முன்வடிவின் 5–ஆம் கூறினால் 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 25/1981) புகுத்தக் கருதப்படும் 295–AA எனும் புதிய பிரிவும், அவற்றில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றன மற்றும் அலுவலர் ஒருவருக்கு அல்லது நபர் ஒருவருக்கு கட்டிடம் அல்லது நிலம் எதிலும் நுழைவதற்கான அதிகாரத்தை அளிப்பதற்கு அரசுக்கும், ஆணையருக்கும் அதிகாரமளிக்கின்றன .

**2.** ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி, தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**கே.பி. முனுசாமி,**
*நகராட்சி நிர்வாகம் மற்றும்*
*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

**2012–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 36/2012.**

**1978–ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

**குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

1. (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப் பெறும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 28/**1978.**

**37–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

**2.** 1978–ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சட்டத்தின் 37–ஆம் பிரிவில்,–

(1). (7)–ஆம் உட்பிரிவில், "ஒப்பளிப்பு வழங்குதல்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''ஒப்புதல் அளித்தல்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(2). (8)–ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(3). (9)–ஆம் உட்பிரிவில், "ஒப்பளிப்பு வழங்கப்பட்ட" எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''ஒப்புதல் அளிக்கப்பட்ட'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல்

வேண்டும்.

**நோக்க–காரண விளக்கவுரை.**

1978–ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1978) 37–ஆம் பிரிவின் (8)–ஆம் உட்பிரிவின்படி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டவாறான மேற்சொன்ன வாரியத்தின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் ஒப்புதலுக்காக அரசுக்கு அனுப்பப்படுதல் வேண்டும். தற்போது, அரசானது, மாநிலப் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சட்டப்படியான வாரியங்களின் வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள், ஒப்புதலுக்காக அரசுக்கு அனுப்பப்படத் தேவையில்லை எனவும், அரசால் வழங்கப்படும் அறிவுறுத்தங்களைக் கவனத்தில் கொண்டு உரிய பொதுத்துறை நிறுவனங்களும், சட்டப்படியான வாரியங்களும்தான் அவற்றைச் சரிபார்த்தலும் அந்த வரவுசெலவுத் திட்டத்திற்கு ஒப்புதலளித்தலும் வேண்டும் எனவும் முடிவு செய்துள்ளது. அதற்கிணங்கிய வகையில் அரசானது, 28/1978 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் 37–ஆம் பிரிவை கருதியுள்ள நோக்கத்திற்கு இணங்கியவகையில் தக்கவாறு திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.பி. முனுசாமி,**
*நகராட்சி நிர்வாகம் மற்றும்*
*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

**2012—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 37/2012.**

**தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

**1.** (1) இந்தச் சட்டம், 2012—ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். **குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

(2) இது, 2012—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 14—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 1/1982. **2.** 1981—ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12—ஆம் பிரிவில், (3)—ஆம் உட்பிரிவிற்கான மூன்றாம் வரம்புரையில் ''அறுபத்தைந்து ஆண்டுகள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக ''எழுபது ஆண்டுகள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 1/1982 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 2/1982. **3.** 1981—ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12—ஆம் பிரிவில், (3)—ஆம் உட்பிரிவிற்கான மூன்றாம் வரம்புரையில் ''அறுபத்தைந்து ஆண்டுகள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக ''எழுபது ஆண்டுகள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 2/1982 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 15/1984. **4.** 1984—ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12—ஆம் பிரிவில், (3)—ஆம் உட்பிரிவிற்கான மூன்றாம் வரம்புரையில் ''அறுபத்தைந்து ஆண்டுகள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக ''எழுபது ஆண்டுகள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 15/1984 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்திற்கான திருத்தம்.

23/1985 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்திற்கான திருத்தம். **5.** 1985—ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்தின் 13—ஆம் பிரிவில், (3)—ஆம் உட்பிரிவிற்கான மூன்றாம் வரம்புரையில் ''அறுபத்தைந்து ஆண்டுகள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக ''எழுபது ஆண்டுகள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 23/1985.

31/1990 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்திற்கான திருத்தம். **6.** 1990—ஆம் ஆண்டு மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11—ஆம் பிரிவில், (3)—ஆம் உட்பிரிவிற்கான மூன்றாம் வரம்புரையில் ''அறுபத்தைந்து ஆண்டுகள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக ''எழுபது ஆண்டுகள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 31/1990.

45/1997எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்திற்கான திருத்தம். **7.** 1997ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12—ஆம் பிரிவில், (3)—ஆம் உட்பிரிவிற்கான மூன்றாம் வரம்புரையில் ''அறுபத்தைந்து ஆண்டுகள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக ''எழுபது ஆண்டுகள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 45/1997.

27/2002 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்திற்கான திருத்தம். **8.** 2002—ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 10—ஆம் பிரிவில், (3)—ஆம் உட்பிரிவிற்கான இரண்டாம் வரம்புரையில் ''அறுபத்தைந்து ஆண்டுகள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக ''எழுபது ஆண்டுகள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 27/2002.

32/2002 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்திற்கான திருத்தம். **9.** 2002—ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12—ஆம் பிரிவில், (3)—ஆம் உட்பிரிவிற்கான இரண்டாம் வரம்புரையில் ''அறுபத்தைந்து ஆண்டுகள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக ''எழுபது ஆண்டுகள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 32/2002.

33/2008 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்திற்கான திருத்தம்.

**10.** 2008–ஆம் ஆண்டு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகச் சட்டத்தின் 10–ஆம் பிரிவில், (4)–ஆம் உட்பிரிவிற்கான இரண்டாம் வரம்புரையில் ''அறுபத்தைந்து ஆண்டுகள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக ''எழுபது ஆண்டுகள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 33/2008.

நீக்கமும் காப்பும்.

**11.** (1) 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டம் இதன்மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/2012.

தமிழ்நாடு சட்டம் 1/1982.
தமிழ்நாடு சட்டம் 2/1982.
தமிழ்நாடு சட்டம் 15/1984.
தமிழ்நாடு சட்டம் 23/1985.
தமிழ்நாடு சட்டம் 31/1990.
தமிழ்நாடு சட்டம் 45/1997.
தமிழ்நாடு சட்டம் 27/2002.
தமிழ்நாடு சட்டம் 32/2002.
தமிழ்நாடு சட்டம் 33/2008.

(2) அவ்வாறு நீக்கஞ் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டவாறான1981–ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டம் அல்லது 1981–ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டம் அல்லது 1984–ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டம் அல்லது 1985–ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டம் அல்லது 1990–ஆம் ஆண்டு மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டம் அல்லது 1997–ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டம் அல்லது 2002–ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டம் அல்லது 2002–ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டம் அல்லது 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் இந்தச் சட்டத்தினால் திருத்தம்

செய்யப்பட்டவாறான அந்தச் சட்டங்களின்படி முறையே செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க–காரண விளக்கவுரை**

பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரானவர் 1981–ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1/1982), 1981–ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1982), 1984–ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1984), 1985–ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 23/1985), 1990–ஆம் ஆண்டு மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1990), 1997–ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 45/1997), 2002–ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக் கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/2002), 2002–ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/2002), 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 33/2008) ஆகிய சட்டங்களின்படி அறுபத்தைந்து வயது வரை பதவி வகித்தல் வேண்டும். அரசானது, கல்வியாளர் பெறும் அறிவானது இம்மாநிலத்தில் கல்வியை வளம்பெறச் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு இயலும் வகையில் 2009–ஆம் ஆண்டு மையப் பல்கலைக் கழகங்கள் சட்டத்திற்கு (மையச் சட்டம் 25/2009) இணையாக துணைவேந்தர்களின் ஓய்வு பெறும் வயதினை அறுபத்தைந்து வயதிலிருந்து எழுபது வயதிற்கு உயர்த்துவதற்கு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டங்களைத் திருத்துவதென முடிவு செய்தது. அதற்கிணங்கிய வகையில், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்த) அவசரச்சட்டமானது (தமிழ்நாடு அவசரச்சட்டம் 5/2012) 2012–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 14–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு, அது 2012–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 14–ஆம் தேதியிட்ட <u>தமிழ்நாடு அரசிதழின்</u> சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

**2.** இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச்சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**பி. பழனியப்பன்,**
*உயர்கல்வித்துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

**2012—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/2012.**

**1976-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

1.(1) இந்தச் சட்டம், 2012—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது 2012 —ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3 —ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

குடியரசுத் தலைவரின் சட்டம் 25/1976. 2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 1976—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின், 4—ஆம் பிரிவில், (1) —ஆம் உட்பிரிவில் "முப்பத்தாறு ஆண்டுகள் இரண்டு திங்களுக்கு" எனும் சொற்றொடருக்குப் பதிலாக, "முப்பத்தாறு ஆண்டுகள் எட்டு திங்களுக்கு" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 4—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 13/2012. 3. (1) 2012-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகின்றது. நீக்கமும் காப்பும்.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், இந்த அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மை சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்த சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மை சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க – காரண விளக்கவுரை.**

பட்டியலிடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின் (குடியரசுத் தலைவரின் சட்டம் 25/1976) 4–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்படி முதல் நிலையாக இரண்டு ஆண்டு காலஅளவுக்குத் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். அத்தனி அலுவலர்களின் நியமனக் காலஅளவானது அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்து அது, 2012–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 9–ஆம் நாளன்று முடிவடைவதாக இருந்தது.

**2.** அரசினால் ஏற்பளிக்கப்பட்டவாறான கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்கான கால அட்டவணையின்படி முதல் கட்டத்தில் முதல் இரண்டு நிலைகளுக்கான தேர்தல்கள் முறையே, 2007–ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 7–ஆம் நாளன்றும், 2007–ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 11–ஆம் நாளன்றும் நடத்தப்பட்டன. இந்தத் தேர்தல்களின்போது நடைபெற்ற ஒரு சில நிகழ்வுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சிகள் இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தும் அடிப்படை நோக்கத்தையே தகர்ப்பதாக அரசு கருதுகிறது. அரசானது, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை அவை எங்கெங்கெல்லாம் நடைபெற்றுள்ளனவோ அங்கெங்கெல்லாம் நீக்கம் செய்வதெனவும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புதிய தேர்தல்களை நடத்துவது எனவும் முடிவு செய்து, அதற்கிணங்கிய வகையில் ஆணையிடப்பட்டுள்ளது. புதிய தேர்தல்களுக்கான புதிய தேர்தல் கால அட்டவணை ஒன்று உரிய முறையில் அரசினால் அறிவிக்கப்படும்.

**3.** எனவே, மேற்சொன்ன பட்டியலிடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்த இன்னமும் அதிக காலம் ஆகும். எனவே அரசானது, மேற்சொன்ன பட்டியலிடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான தனி அலுவலர்களின் நியமனக் கால அளவை 2012–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 9–ஆம் நாளுக்கும் அப்பால் மேலும் ஆறு திங்கள் கால அளவு ஒன்றுக்கு நீட்டிப்பது எனவும், மேற்சொன்ன சட்டத்தை அந்நோக்கத்திற்காகத் தக்கவாறு திருத்துவதெனவும் முடிவு செய்துள்ளது. அதற்கிணங்கிய வகையில் 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 13/2012) 2012–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3–ஆம் நாளன்று, ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு அது 2012–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3–ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

**4.** இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**செல்லூார். கே. ராஜு,**
*கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

**2012–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/2012.**

**1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2012–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 43/1997.

12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12–ஆம் பிரிவில், (3)–ஆம் உட்பிரிவிற்கான மூன்றாம் வரம்புரையில், ''அறுபத்தைந்து வயதினை'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''எழுபது வயதினை'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 7/2012.

நீக்கமும் காப்பும்.

**3.** (1) 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக (திருத்த) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ, அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாகவோ அல்லது எடுக்கப்பட்டதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை.**

இம்மாநிலத்தில் கல்வியாளர்கள் பெறும் அறிவும் அனுபவமும் சட்டக்கல்வியை வளம்பெறச் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு இயல்விக்கும் வகையில் துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதினை உயர்த்துவதற்குக் கருதப்பட்டது. எனவே அரசானது, துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதினை, 2009—ஆம் ஆண்டு மையப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்படி (மையச் சட்டம் 25/2009) உள்ளவாறான துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதிற்கு இணையாக அமையும் வகையில் அறுபத்தைந்து வயதிலிருந்து எழுபது வயதாக உயர்த்துவதற்காக, 1996—ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 43/1997) திருத்துவதென முடிவு செய்தது. அதற்கிணங்கிய வகையில், 2012—ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச்சட்டம் 7/2012) 2012—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 30—ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு, அது 2012—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31—ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**என். ஆர். சிவபதி,**
*பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

**2012–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 40/2012.**

**2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசியச் சட்டப்பள்ளி சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக்குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசியச் சட்டப்பள்ளி (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது 2012–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 9/2012.

11–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசியச் சட்டப்பள்ளி சட்டத்தின், 11–ஆம் பிரிவில், (3)–ஆம் உட்பிரிவிற்கான மூன்றாம் வரம்புரையில், "அறுபத்தைந்து வயதினை" எனும் சொற்றொடருக்குப் பதிலாக, "எழுபது வயதினை" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 8/2012.

நீக்கம்.

**3.** **(1)** 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசியச் சட்டப்பள்ளி (திருத்த) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

**நோக்க—காரண விளக்கவுரை**

இம்மாநிலத்தில் கல்வியாளர்கள் பெறும் அறிவும் அனுபவமும் சட்டக்கல்வியை வளம்பெறச் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு இயல்விக்கும் வகையில் துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதினை, உயர்த்துவதற்குக் கருதப்பட்டது. எனவே அரசானது, துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதினை, 2009—ஆம் ஆண்டு மையப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்படி (மையச் சட்டம் 25/2009) உள்ளவாறான துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதிற்கு இணையாக அமையும் வகையில் அறுபத்தைந்து வயதிலிருந்து எழுபது வயதாக உயர்த்துவதற்காக, 2012—ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசியச் சட்டப்பள்ளி சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் 9/2012) திருத்துவதென முடிவு செய்தது. அதற்கிணங்கிய வகையில், 2012—ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசியச் சட்டப்பள்ளி (திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 8/2012) 2012—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 30—ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு, அது 2012—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31—ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

**2.** இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**என்.ஆர். சிவபதி,**
*பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு,*
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

**2012–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 41/2012.**

**1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக்குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

**1.** (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள்(இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 22/1959. **2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தின் 6–ஆம் பிரிவில்,– 6–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1). (8)–ஆம் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

‘‘(8–A) ‘‘மாவட்டக் குழு’’ என்றால், 7–A எனும் பிரிவின்படி அரசால் அமைத்துருவாக்கப்பட்ட குழு என்று பொருள்படும்;”;

(2). (18)–ஆம் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

‘‘(18–A) ‘‘பட்டியல் சாதிகள்’’ மற்றும் ‘‘பட்டியல் பழங்குடிகள்’’ என்பது, அரசமைப்பின் 366–ஆம் உறுப்பின் (24) மற்றும் (25)–ஆம் கூறுகளில் முறையே, அவற்றுக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளையே கொண்டிருத்தல் வேண்டும்;”.

**3.** முதன்மைச் சட்டத்தின் 7–ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- 7–A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்

‘‘**7-A. மாவட்டக்குழுக்களை அமைத்துருவாக்குதல்.**– (1) ஒரு வருவாய் மாவட்டத்தின் ஆட்சிப் பரப்பிற்குள் அமைந்து, 46–ஆம் பிரிவில் (iii) எனும் கூறின் கீழ் வருகிற அத்தகைய சமய நிறுவனங்கள் அல்லாத பிற சமய நிறுவனங்கள் அனைத்தையும் பொறுத்த அளவில், அரசால் பெயர் குறித்து நியமனம் செய்யப்படக்கூடியவாறான மூன்றுக்குக் குறையாததும் ஐந்துக்கு மேற்படாததுமான அலுவல் முறைசாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்டக்குழு என அழைக்கப்படுகிற குழு ஒன்றை அரசானது அமைத்துருவாக்குதல் வேண்டும். மாவட்டக் குழுவின் உறுப்பினர்கள் அறிஞர்களாக, கொடையாளர்களாக அல்லது சமயப் பற்றுள்ள நபர்களாக இருப்பதுடன் இந்தச் சட்டத்தின்படி அறங்காவலர்களாக நியமனம் செய்யப்படுவதற்குத் தகுதியுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(2) மாவட்டக்குழுவின் உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாக இருத்தல் வேண்டும் மற்றும் மேற்சொன்ன குழுவிற்குத் தொடர்புடைய பிற பொருட்பாடுகள் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும்.

(3) அரசு, காரணம் காட்டுமாறு கோருகிற அறிவிப்பு ஒன்றை வழங்கிய பின்னர், பொதுநலனை முன்னிட்டு மாவட்டக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரையுமோ அல்லது அவர்களுள் எவரையுமோ நீக்கலாம்.

(4) மாவட்டக்குழு, (பெண்கள் மற்றும் பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் உள்ளடங்கலாக) இந்தச் சட்டத்தின்படி அறங்காவலர்களாக நியமனம் செய்யப்படுவதற்குத் தகுதியுடைய மற்றும் பரம்பரை

வழியல்லாத அறங்காவலர்களாக அல்லது நேர்விற்கேற்ப அறங்காவலர்களாக நியமிப்பதற்குப் பொருத்தமான நபர்களின் பெயர்களைக் கொண்டதொரு பெயர் பட்டியலை வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் தயாரித்தல் வேண்டும்; மற்றும் அதனை,–

(i) 46–ஆம் பிரிவின் (i) எனும் கூறின் கீழ் வரும் சமய நிறுவனங்களைப் பொறுத்த அளவில் இணை ஆணையர் அல்லது துணை ஆணையருக்கு;

(ii) 46–ஆம் பிரிவின் (ii) எனும் கூறின் கீழ் வரும் சமய நிறுவனங்களைப் பொறுத்த அளவில் ஆணையருக்கும்; மற்றும்

(iii) 46–ஆம் பிரிவின்படி வெளியிடப்பட்ட பட்டியலில் உள்ளடக்காத சமய நிறுவனத்தைப் பொறுத்த அளவிலும் இந்தச் சட்டத்தின் VI எனும் அத்தியாயத்தின்படி அறிவிக்கை செய்யப்பட்டவாறான அல்லது அறிவிக்கை செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட சமய நிறுவனமாக இல்லாத சமய நிறுவனம் எதனையும் பொறுத்த அளவிலும் உதவி ஆணையருக்கு அனுப்புதல் வேண்டும்.

(5) இந்தப் பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், மாவட்டக்குழுவானது உயர்நீதிமன்றத்தினால் அல்லது உயர்நீதிமன்றத்திற்குக் கீழமைந்த நீதிமன்றம் எதனாலும் இந்தச் சட்டத்தின்படி செயல்திட்டமொன்று அறுதிசெய்யப்பட்ட அல்லது அறுதி செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட சமய நிறுவனம் எதனையும் பொறுத்த அளவில் இந்தப் பிரிவின்படி நபர்களின் பெயர்களைக் கொண்டதொரு பெயர் பட்டியல் எதனையும் அனுப்புவதற்கு அதிகார வரம்பு கொண்டிருத்தல் கூடாது.''.

47–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 47–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில்,–

(1) (a) எனும் கூறுக்கான முதலாம் வரம்புரைக்குப் பதிலாக, பின்வரும் வரம்புரையானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

'' **வரம்புரை**: ஆனால், (i) மற்றும் (ii) எனும் இனங்களின்படி அமைத்துருவாக்கப்பட்ட அறங்காவலர்கள் குழுமமானது, (c) எனும் கூறின் வகைமுறைக்கு உட்பட்டு, 7–A எனும் பிரிவின் (4)–ஆம் உட்பிரிவின்படி, தொடர்புள்ள மாவட்டக்குழுவால் அனுப்பப்பட்ட நபர்களின் பெயர்ப்பட்டியலில் உள்ள நபர்களுக்கிடையே இருந்து, இணை ஆணையரால் அல்லது துணை ஆணையரால் அல்லது நேர்விற்கேற்ப ஆணையரால் நியமிக்கப்பட்ட மூன்று நபர்களைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும்:'';

(2) விளக்கமானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

49–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 49–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவிற்கான முதலாம் வரம்புரைக்குப் பதிலாக, பின்வரும் வரம்புரையானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

''**வரம்புரை**: ஆனால், இந்த உட்பிரிவின்படி அமைத்துருவாக்கப்படும் அறங்காவலர்கள் குழுமமானது 7–A எனும் பிரிவின் (4)–ஆம் உட்பிரிவின்படி, தொடர்புள்ள மாவட்டக்குழுவால் அனுப்பப்பட்ட நபர்களின் பெயர்ப்பட்டியலில் உள்ள நபர்களுக்கிடையே இருந்து, உதவி ஆணையரால் நியமிக்கப்பட்ட மூன்று நபர்களைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும். அவர்களில் ஒரு உறுப்பினர் பட்டியல் சாதிகளையோ அல்லது பட்டியல் பழங்குடிகளையோ சேர்ந்த உறுப்பினர் ஒருவராகவும் மற்றும் மற்றொருவர் பெண்பாலராகவும் இருத்தல் வேண்டும்:".

92–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டத்தின் 92–ஆம் பிரிவில், (4)–ஆம் உட்பிரிவில், (iii) எனும் கூறுக்குப்பின்பு, பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

''(iv) மாவட்டக்குழுக்களுக்கான செலவுகள்.''.

116–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**7.** முதன்மைச் சட்டத்தின் 116–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவில், (xxi) எனும் கூறில், (a) எனும் உட்கூறுக்குப் பின்பு, பின்வரும் உட்கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

''(b) மாவட்டக் குழு;''.

<u>நோக்க–காரண விளக்கவுரை</u>.

ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் பரம்பரை வழியல்லாத அறங்காவலர்களின் நியமனத்திற்கான பெயர்களின் பட்டியல் ஒன்றை சமய நிறுவனங்களுக்காகத் தயாரிப்பதற்கென மாவட்டக்குழு ஒன்றை அமைத்துருவாக்குவதற்காக வகைசெய்யும், 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தின் 7–A எனும் பிரிவானது 15/2006 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் மூலமாக விட்டுவிடப்பட்டது. சமய நிறுவனங்களுக்கு பரம்பரை வழியல்லாத அறங்காவலர்களைத் தேர்வு செய்வதற்கு மாவட்டக் குழுக்கள் இல்லாத காரணத்தால் பரம்பரை வழியல்லாத அறங்காவலர்களை நியமனம் செய்வதில் மிக அதிகமான கால தாமதமும், பரம்பரை வழியல்லாத அறங்காவலர்களாக நியமனம் செய்யப்படுவதற்குத் தகுதியுடைய நபர்களைத் தேர்வு செய்வதில் ஒளிவு மறைவற்ற தன்மை இல்லாமலும் இருந்தது.

2. தற்போது சமய நிறுவனங்களுக்குப் பரம்பரை வழியல்லாத அறங்காவலர்களை நியமிப்பதை விரைவுபடுத்தும் பொருட்டும், அவர்களைத் தேர்வு செய்யும் நடைமுறையில் ஒளிவு மறைவற்ற தன்மையைக் கொண்டுவரும் பொருட்டும் அரசானது, பரம்பரை வழியல்லாத அறங்காவர்களின் நியமனத்திற்கான பெயர்களின் பட்டியலைத் தயாரிப்பதற்கு அறிஞர்கள், கொடையாளர்கள், சமயப்பற்றுள்ள நபர்கள் ஆகியோர் அடங்கிய மாவட்டக் குழுக்களை அமைத்துருவாக்குவதெனவும், அந்நோக்கத்திற்காக 1959–ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் 22/1959) திருத்துவதெனவும் முடிவு செய்துள்ளது.

3. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எம். எஸ். எம். ஆனந்தன்,**
*இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இச்சட்டமுன்வடிவின் **3**–ஆம் கூறினால் புகுத்தப்படக் கருதப்படும் **7**–A எனும் பிரிவானது மாவட்டக்குழு மற்றும் தகுதியுடைய நபர்களுக்கான பெயர்களின் பட்டியல் தயாரிக்கப்படவேண்டிய முறை தொடர்பான பொருட்பாடுகளை வகுத்துரைப்பதற்கான விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கிறது.

**2.** ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.